**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 262/2019**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ஜோதிலட்சுமி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 17.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதிதரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** தாவா சொத்து பூர்வீக சொத்தா என்றால் இல்லை. தாவா சொத்து நத்தம் புறம்போக்கு. அனுபவத்தின் அடிப்படையில் என் தகப்பனாருக்கு பட்டா கொடுக்கப்பட்டது. என் தகப்பனாரின் தந்தை பெயர் ஆண்டியப்பன். ஆண்டியப்பனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தை என் தாத்தா ஆண்டியப்பன் அனுபவம் செய்தாரா என்றால்இல்லை என் அப்பாதான் அனுபவம் செய்தார். நான் சொல்வது தவறு என்றும், என் தாத்தா அனுபவம் செய்துவந்து, அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான, பெரியசாமி, சுப்பிரமணி இருவரும் அனுபவத்தில் இருந்ததால் அவர்கள் பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது வரை வருவாய்த்துறை ஆவணங்களில் மேற்படி நபர்கள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ல் பின்னிணைப்பாக உள்ள பட்டா எண்.311 ல் என் தகப்பனார் பெயர் மட்டும் இருப்பதாக எவ்வாறு கிடைத்தது என்றால் என் அப்பா தான் கொடுத்தார். மேற்படி பட்டா அசல் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் செய்கிறேன். தாவா சொத்தை அபகரிக்க வேண்டி எனது தகப்பனார் பெயரில் மட்டும் பட்டா இருப்பதாக வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள பட்டாவை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குடியிருப்பது உண்மையாக இருந்தால் பஞ்சாயத்தில் வீட்டுவரி நிர்ணயம் செய்திருப்பார்கள் என்றால் வழக்கு நிலுவையில் இருப்பதால் வீட்டுவரி நிர்ணயம் செய்யப்படவில்லை. வாதி மாறன் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வா.சா.ஆ.-4 ஆவணம் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த பின்னிட்டு, அதில் ஒரு சிறிய குடிசை வீடு கட்டி நான் அனுபவம் செய்து வருகிறேன்.

3) எங்கள் ஊரில் முதலமைச்சர் முகாம் நடந்ததா என்றால் நடந்தது. அதில்தான் என் அப்பா பெயருக்கு பட்டா வழங்கினார்கள். வா.சா.ஆ.4 ல் பின்னிணைப்பாக உள்ள பட்டாவில் கையொப்பமிட்டுள்ள சுப்பிரமணி என்பவர் மீது போலியாக பட்டா தயார் செய்த குற்றத்திற்காக குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி பட்டாவில் கண்டுள்ள தேதியில் சுப்பிரமணி என்பவர் அந்த பொறுப்பிலேயே இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா

சொத்தை பிரித்து வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நடுவில் வாதி குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. காலியிடம்தான்.நான் மட்டும்தான் குடியிருக்கிறேன்.

4) தாவா சொத்தின் மேற்கே வடிவேல்வீடு, கிழக்கே அண்ணாதுரை வீடு உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வடக்கில் கிழமேல் வீதி என்றால் சரிதான். தெற்கே துரைராஜ் மெத்தை வீடு என்றால் சரிதான். மேற்படி மூன்று நபர்களும் என் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் வடிவேல், வாதி மாறன் மட்டும் என் சகோதரர்கள். அண்ணாதுரை என் தகப்பனாரின் இரண்டாம் தாரத்து மகன் என்றால் சரிதான். என் சகோதரர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்களா என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு அவர்களுடன் பேச்சுவார்த்தை இல்லை. எதனால் பேச்சுவார்த்தை இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. 2013-2014 ம் வருடத்திலேயே தாவா சொத்தில் வரிவிதிப்பு செய்யப்பட்டு வாதி வரிசெலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

5) என் தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த அசல் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ல் தாவா சொத்து பூர்வீக சொத்து என கண்டுள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், பூர்வீகமாக பாத்தியப்பட்டுள்ளது என கண்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே வாய்கறாராக பிரிக்கப்பட்டு வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் பொய்யான பட்டா தயார் செய்து, அதனடிப்படையில் வா.சா.ஆ.4 எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Additional District Munsif,**

Kulithalai.